Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.264/2023, Cr.No.808/2020, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பூபதி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | மணி | தொழில் | வட்ட சார் ஆய்வாளர் |
| கிராமம் | ஜோலார்பேட்டை | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 11th day of September 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் திருப்பத்தூர் வட்டத்தில் வட்ட சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.07.2020 அன்று நான் திருப்பத்தூர் வட்டத்தில் குறு வட்ட அளவையராக பணிபுரிந்து வந்த போது மண்டலநாயனகுண்டா ஊரைச் சேர்ந்த திருமதி.சுமதி சர்வே எண் 195/1A, 195/2A–ஐ அளப்பதற்காக மனு கொடுத்திருந்தார். நான் 27.07.2020 அன்று காலை 10.00 மணிக்கு மண்டலநாயனகுண்டா மேற்படி சர்வே எண்ணை அளப்பதற்காக சென்றேன். அப்போது என்னுடன் மண்டலநாயனகுண்டா கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டன் மற்றும் உதவியாளர் திருமதி.தமிழ்ச்செல்வி ஆகியோர் வந்தனர். மேற்பபடி நிலத்தை அளந்து எல்லை கல் நட்டோம். மேற்கண்ட 2 சர்வே எண்களின் சொத்துக்ககளை அளந்து முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து விட்டோம். மறுநாள் மனுதாரர் மற்றும்எதிர்மனுதாரர் மாணிக்கம் மற்றும் சின்னதுரை ஆகியோரை தாசில்தாரர் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தினார். பின்னர் பேச்சு வார்த்தை நடந்ததற்கு மறுநாள் எதிர் தரப்பினர் எல்லைக் கல்லை பிடுங்கிவிட்டதாக கூறினர். அதை பார்வையிடுவதற்காக 29.07.2020 ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் நானும் மண்டலநாயனகுண்டா கிராம நிர்வாக அலுவலர் மணிகண்டன் மற்றும் உதவியாளர் திருமதி.தமிழ்ச்செல்வி ஆகியோர் சென்றோம். எதிர்தரப்பினரின் சர்வே எண் 195/2B நிலத்தில் ஏன்

எல்லைக் கல்லை போட்டு வைக்கிறீர்கள் என்று கேட்டனர். அதற்கு நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் எல்லைக் கல்லை நட்டு வைத்ததாக கூறினேன். அதற்கு எதிர் தரப்பினர் கல்லை இங்கு நடக்கூடாது என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும், என்னை ஒருமையில் தரக்குறைவாக பேசினர். பின்னர் தாசில்தார், கிராம நிர்வாக அலுவலரான மணிகண்டனிடம் புகார் அளிக்குமாறு கூறினார். பின்னர் மணிகண்டன் புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

சம்பவம் நடந்த இடம் வழக்கின் தரப்பினருக்கு சொந்தமான தனிப்பட்ட இடம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய எதிர் தரப்பினர் என்பது யாரை குறிக்கும் என்றால் ராஜா மற்றும் சின்னதுரை வகையறாவைக் குறிக்கும். என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரித்த போதும் கூறினேன் என்றால் சரிதான். சுமதி எந்த தேதியில் சொத்தை அளப்பதற்கு மனு கொடுத்தார் என்றால் என்னிடம் கோப்பு இல்லாததால் என்னால் சரியாக கூற முடியவில்லை. சம்பவ இடத்திற்கு நான் நிலத்தை அளப்பதற்காக மொத்தம் மூன்று நாட்கள் சென்றேன் என்றால் சரிதான், ஆனால், இரண்டு நாட்கள் மட்டுமே அளப்பதற்காக சென்றேன். மூன்றாவது நாள் சம்பவயிடத்தை பார்வையிட மட்டும் சென்றேன். சுமதியின் மனுவை வருட கணக்கில் நிலுவையில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. நான் பணியை சரிவர செய்யாததால் அவரின் மகன் தினேஷ் தற்கொலைக்கு முயன்றார் என்றால் சரியல்ல. முதல் நாள் சுமதியின் சொத்தை அளப்பதற்காக சென்றோம் என்றால் சரிதான். பக்கத்து நிலத்துக்காரர்களுக்கு இன்னும் சம்பந்தமாக அறிவிப்பு அளித்தேனா என்றால் இல்லை. சுமதியின் நிலத்திற்கு அருகாமையில் சின்னதுரையின் நிலம் உள்ளது என்றால் சரிதான். சுமதியின் நிலத்தை அளப்பதற்கு சென்றதை அலுவலக நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன். முதல் நாள் நிலத்தை அளந்த போது எதிரிகள் அங்கு இல்லை என்றால் சரிதான். தாசில்தாரல் அலுவலகத்தில் எதிரிக்கும் தாசில்தாருக்கும் வாக்குவாதம் நடந்தது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பேச்சுவார்த்தை நடந்த போது நான் அங்கு இல்லாததால் எனக்கு அங்கு என்ன நடந்தது என்று தெரியாது. மூன்றாவது நாள் நான் நிலத்தை அளக்கவில்லை என்றால் சரிதான். மூன்றாவது நாள் எதிரியானவர் தனது சொத்தை பார்வையிடும்படி மனு ஏதேனும் அளித்தாரா என்றால் தேடிப் பார்த்தால் தான் கூற முடியும்.

மூன்றாவது நாள் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அங்கு எதிரி என்னை ஒருமையில் தரக்குறைவாக பேசவில்லை என்றாலும் இரண்டாவது நாள் எதிரிக்கும் தாசில்தாருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தின் காரணமாக எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எல்லைக்கல்லை பிடுங்கியது சம்பந்தமாக புகார் ஏதேனும் அளித்துள்ளேனா என்றால் அது குறித்து கிராம நிர்வாக அலுவலர் தான் புகார் அளிக்க முடியும். சுமதியின் மகன் தற்கொலைக்கு முயன்று செய்திகளில் பரவியதால் அதை மறைப்பதற்காக தாசில்தார் கூறியதின் அடிப்படையில் இரண்டு எதிர் தரப்பினர்களின் மீதும் பொய்யான புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Judicial Magistrate No.II,
Tirupathur.